# உப்பு நாய்கள் நாவலில் பெண்களின் நிலை

**ரா. சித்திரகலா& முனைவர். வெ.திலகம்**
**தமிழ்த்துறை ஆய்வு மையம்,**
**ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**
**குற்றாலம்.**

57

**முன்னுரை**

இன்றைய தமிழ் இலக்கியவுலகையும் , ஆய்வுலகையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ள இயங்கள் பல. அவற்றில் பெண்ணியம் முதன்மைத்துவம் வாய்ந்தது. தமிழ் இலக்கியத்தில் சமூகப்பண்பாட்டுத் தளங்களில் பெண்களின் இருத்தலை அறிந்து கொள்ளவும் , அவர்களின் மீதான வன்முறையை உணர்ந்து கொள்ளவும், பெண்ணியம் உதவுவதால் இதுபற்றி விரிவாக அறிதல் அவசியமாகிறது. இவ்வகையில் இளம் எழுத்தாளரான லஷ்மி சரவணகுமாரின் **“உப்புநாய்கள்”** நாவல் சித்தரிக்கும் பல்வேறு வகைப்பட்ட பெண்களின் நிலையைக் இக்கட்டுரையில் காணலாம்.

**பெண்ணியம் – சொற்பொருள் விளக்கம்**

ஆங்கிலத்தில் **“Feminism”** என்று வழங்கப்படும் கலைச் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல் , பெண்ணைக் குறிக்கும் **“Femina”** என்ற இலத்தீன் மொழிச் சொல்லிருந்து தோன்றியது. பெண் என்னும் சொல் **“பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் ”** என்று பொருள்படும். பெண்ணியம் என்ற இச்சொல் , **1890-இல்** இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும் , பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டிலேயே இச்சொல் பெருவழக்கில் வந்தது. தமிழில் பெண்ணியம் , பெண்நிலை வாதம், பெண்ணுரிமை ஏற்பு என்ற சொற்கள் இதற்குரிய சொற்களாக வழங்கி வருகின்றன. நாம் பெண்ணியம் என்றே வழங்குவோம்.

**பெண்ணியம் – கருத்து விளக்கம்**

**“பெண்ணியம்”** என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும். **சார்ல்ட் பன்ச்** என்பவர், “பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்[1] ”என்கிறார்.

**கார்டன்** என்பவர் **(Garden)** பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்றார்[2] .

**புட்சர்** என்பவர் “பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் ”[3] என்றார். ஆகவே பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

**பெண்களும் தொழிலும்**

நெரிசலான சாலையில் மக்களிடம் பர்ஸை திருடும் பெண்ணான செல்விக்கு திருச்சியும் , மதுரையும் சலித்துப் போக மதினி தவுடுடன் மெட்ராஸ் மாநகருக்கு பயணப்பட்டாள். இந்நகரின் முக்கியமான இடமான தி.நகர் , பிராட்வே, புரசைவாக்கம் ஏரியாவே தொழில் செய்வதற்கு சிறந்த இடம் என்பதை அறிந்து கொண்டு அங்கு தொழில் செய்ய ஆரம்பித்தவள் முதலில் பிக்பாக்கெட் அடித்தாள். அதன்பின்னர் சிரமம் இல்லாத செல்போனை திருடவும் கற்றுக் கொண்டாள். ஒரு நாள் தொழில் செய்யும்போது போலீஸிடம் மாட்டிக் கொண்ட செல்வியை பாபு மீட்டான். “குருவியாக இருக்கியாக்கா .....நல்ல துட்டு

கிடைக்கும்"[4] என்று கேட்டு செல்வியை குருவியாக சேர்ந்துவிட்டான். பாபுவுடன் இருந்து தொழிலைக் கற்றுக் கொண்டவள் பின் தன் தைரியத்தால் தனியாக பொட்டலம் (கஞ்சா) எடுத்து செல்லும் அளவிற்கு வளர்ந்தாள். இவ்வாறு குடும்பச் சூழ்நிலை , வறுமை காரணமாக சிறுசிறு தவறு செய்த செல்வி பொட்டலம் விற்கும் அளவிற்கு பெரும் தவறில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறாள்.

கடப்பாவில் இருந்து பிளைப்பு தேடி வந்த ராஜீவின் மனைவியும் கட்டிடத் தொழிலாளியாக வேலை பார்த்து தன் குடும்பத்தைக் காப்பாற்றும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். அதற்குக் காரணம் பொறுப்பற்ற கணவனின் ஊதாரித்தனமான செயல்களே ஆகும். இவ்வாறு பெண்கள் தொழில் ரீதியாக படும் அவலங்களை எடுத்துக் காட்டியுள்ளார் எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார்.

**குடும்ப சூழலில் பெண்கள்**

உப்பு நாய்கள் நாவலில் வரும் **"தவுடு"** என்பவள் செல்வியைப் போல் திருட்டு தொழிலுக்கு பழக முடியாதலால் "நான் இனிமே வீட்டு வேலய மட்டும் பார்த்துக்கறேன் "[5] என்று அவளாகவே கூறினாள். தன் கணவருடன் சேர்ந்து , வியாசர்பாடி ரயில்வே ஸ்டேசனுக்கு எதிர்த்தாற்போல் கடையைத் தொடங்கி ஆரம்பத்தில் குடும்பம் நடத்தத் தேவையான அளவு வருமானம் கிடைத்தது. ஆர்மினியச் சர்சின் பாதர் கன்னியாஸ்திரியான இவாஞ்சிலினைக் கெடுத்து விடுகிறான். அங்கிருந்து சென்ற இவாஞ்சலின் தனக்கான ஒருவனை தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொண்டு ஒரு பொறுப்பான குடும்பத் தலைவியாக மாறியிருந்ததை இந்நாவலில் காணமுடிகிறது. இன்றைய காலகட்டத்தில் மரபுவழி வந்த "குடும்பம்" என்ற அமைப்பின் கீழ் பெண்கள் கட்டுண்டு இருப்பதைக் காணமுடிகிறது.

**பெண் புறக்கணிப்பும், செல்போன் மோகமும்**

திருமண வாழ்க்கை மகிழ்வையளிக்கவில்லையென்றால் பெண்கள் அப்பிணைப்பை விட்டு விலகிவிடுவர் என்பதற்கிணங்க ஜெய்சால்மீருலிருந்து திருமணம் முடிந்து வந்த ஷிவானிக்கு முதல் கணத்திலேயே இந்த ஊர் பிடிக்காமல் போனது [6.] கணவரின் வீட்டிலுள்ள அனைவரும் பணத்தின் மீது மட்டும் ஆர்வமுள்ளவர்களாய் இருந்தனர். தனித்துவிடப்பட்ட ஷிவானி தனிமையின் வெறுமையாலும் காமத்தின் கிளர்ச்சியாலும் செல்போன் மோகத்திலும் மகேஷ் என்பவனிடம் பழகி அவனுடன் இன்புற்றிருந்தாள். மகேஷ் ஆபாசமாக தன்னை படம் எடுத்து நண்பர்களுடன் பகிர்வதை தெரிந்து கொண்டு அவனை அடித்து , மிரட்டி அந்த போட்டாவை எல்லாம் அழிக்கச் செய்தாள். அன்றிலிருந்து மகேஷிடம் பேசுவதேயில்லை. இவ்வாறு பெண்கள் குடும்பத்திலிருந்து புறக்கணிக்கப்படுவதும் , அதனால் அவர்களின் வாழ்க்கை சீரழிவதையும் எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார் தம் நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

**மனிதநேயமும் உதவும் பாண்மையும்**

சென்னைக்கு பிளைப்பு தேடி வந்த ராஜீவும் அவனது குடும்பமும் அம்பத்தூரில் பதிமூன்று மாடிக் கட்டிடத்தில் வேலைப்பார்த்தனர். ராஜீ மகள் ஆதம்மாவுக்கு இந்நகரில் இருக்கும் கடலை பார்க்க வேண்டுமென்ற ஆர்வமிருந்தது. ஆதம்மா வேலைபார்த்துக் கொண்டிருந்த கட்டிடத்தின் பணி முடிந்ததால் போரூரைத் தாண்டி கல்லூரிகளின் கட்டுமானப் பணிக்கான வேலையில் சேர்ந்தனர். ஆதம்மாவுக்கு மட்டும் ஞாயிற்றுக்கிழமை நினைத்த நேரத்தில் கடலுக்குப் போக முடியுமா ? ஸ்கைவாக் போக முடியுமா ? என்ற கவலைமட்டுமிருந்தது.

"ஒரு நகரின் ரகசியம் புரிந்து கொள்வதென்பது அந்நகரின் மனிதர்களைப் புரிந்து கொள்வதுதான் "[7] என்பதை புரிந்த ஆதம்மாவுக்கு ஆர்த்தியின் நட்பு கிடைத்தது. இவள் கட்டிட வேலை பார்க்கும் இடத்தில் புதிதாக தொடங்கிய வெளிநாட்டு கம்பெனியில் பணிபுரியும் ஆர்த்தி சின்ன குழந்தையின் ஆசையை புரிந்து கொண்டாள். கட்டிட வேலை முடிந்து அங்கிருந்து கிளம்பபோவதை ஆர்த்தியிடம் கூற ஆதம்மாவை அழைத்துக் கொண்டு அந்நகரின் முக்கிய கடை வீதிக்கு சென்று அவளுக்கு பிடித்த எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தாள். மதியஉணவு அருந்திவிட்டு கடலுக்கு சென்றனர். ஆர்த்திக்கு ஆதம்மாவை தன்னுடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்தது. "அக்கா அம்மா கிட்ட போகணுங்கா"[8] என்று ஆதம்மா கூறியதும் அந்த தினம் இவ்வளவு சீக்கிரத்தில்லா முடிவுக்கு வர

வேண்டும் என்று நினைத்தவள் குழந்தையை தாயிடமிருந்து பிரிக்க மனமில்லாமல் அவள் அம்மாவிடம் கொண்டு போய் விட்டாள். இந்த குழந்தையின் அன்பில் ஆர்த்தி தன்னை மறந்தவளானாள்.

ஒரு நாள் ஆதம்மாவின் அப்பா ராஜீ கொலை செய்யப்பட்டதைக் கண்டு கதறி அழுதாள். ஆனால் அவளின் அம்மா இனி நாம் இங்கு இருக்கக் கூடாதென்று அங்கிருந்து கிளம்பி அம்பத்தூர் போகலாம் என முடிவு செய்தாள். கனவுகளோடு வந்த ஆதம்மாவிற்கு இந்த ஊரைவிட்டு போக மனமில்லை. நாம் செல்லப் போவதை ஆர்த்தி அக்காவிடம் சொல்ல வேண்டும் என்று கூறி போனில் விசயத்தைக் கூறினாள். ஆர்த்தி நீங்கள் எங்கும் போக வேண்டாம். தன்னுடனே இருந்துவிடுங்கள் என்று மனிதநேயத்துடன் கூறி அவர்களை தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அவர்களுக்கு உதவும் பாண்மையில் ஆதம்மாவை பள்ளிக் கூடத்தில் சேர்த்து விடுகிறாள். அந்த சின்னக்குழந்தை தன் மனதில் தேக்கி வைத்த ஆசைகளை எல்லாம் நிஜத்தில் நடப்பதை எண்ணி மகிழ்ந்தாள். முதல்நாள் பள்ளிக்கூடம் சென்று திரும்பிய ஆதம்மா ஆர்த்தியிடம் நடந்ததைக் கூறி மகிழ்கிறாள். எல்லாவற்றையும் ஆச்சரியமாய் பார்த்தது போய் விருப்பத்தோடு பார்க்கிறாள். ஆதம்மா , இவ்வாறு பிறருக்கு உதவும் மனப்பான்மையும் மனிதநேயம் உடையவளாய் ஆர்த்தி என்ற பெண்ணை சித்தரித்துள்ளார் எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார்.

**கணவன் மனைவி உறவு சிதைதல்**

சொந்த ஊரைவிட்டு பிளைப்பு தேடி கடப்பாவில் இருந்து வந்த ராஜீவும் அவனது குடும்பமும் முதலில் அம்பத்தூரில் வேலை பார்த்தனர். அதன்பின் போரூரைத் தாண்டி கல்லூரிகளில் கட்டுமானப் பணிக்கான வேலையில் சேர்ந்தனர். 20 ரூபாய் சம்பளம் , தங்கும் இடம் எல்லாம் கொடுத்தனர். ராஜீ எப்போதும் ஒரிசாகாரர்களோடு சுற்றிக் கொண்டும் அதிகமாக குடிப்பதோடு வெவ்வேறு விதமான போதைகளுக்கும் பழக்கப்பட்டுவிட்டான். ஒரு நாள் நள்ளிரவில் ஒரிசாக்காரன்களை தன் டென்டில் படுக்க வைத்த போது குடிபோதையில் ஒரிசாகாரனிடம் பணம் வாங்கிக் கொண்டு தன் மனைவியிடமே தவறாக நடக்க வைத்தான் [9]. முதலில் அவள் ஆசைக்கு இணங்குவது போல் நடித்து அதன்பின் மிருகமாக தாக்கி அங்கிருந்து துரத்தி அடித்துவிட்டாள். தன் கணவனே பணத்திற்காக தன்னை விற்க துணிந்துவிட்டானே என்று அவள்படும் துயரத்தால் கணவன் மனைவிக்கும் இடையே உள்ள உறவு சிதைவு படுவதை இந்நாவலில் காண முடிகிறது.

**குழந்தைத் தொழிலாளர்களின் நிலை**

வறட்சியும், வெறுமையும் நிலவும் கடப்பா ஊரில் உடும்புடனும். ஸர்பங்களுடனுமே விளையாடிய ஆதம்மாவிற்கு மெட்ராஸில் வாழும் மக்களையும் ரொம்ப பிடித்துவிட்டது. தரையில் படுத்துக் கொண்ட ஆதம்மா வானத்தை கடலாகவும் , நட்சத்திரங்களை மீனாகவும் கற்பனை செய்து கொண்டிருந்தாள். அப்போது அவளுடன் இருக்கும் சிறுவர்கள் எத்தனை பேர் என்பதை கணக்கிட்டாள். நல்ல வேலை , நல்ல சாப்பாடு என்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஆதம்மா வந்த கொஞ்ச நாளிலேயே கலவை மிதிக்கவும் சட்டி தூக்கவும் பழகிக் கொண்டாள். பொதுவாக சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை என்கிற விதிமுறைகளையும் மீறி பெரும்பாலான இடங்களில் சிறுமிகளும் , சிறுவர்களும் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் இரவு அந்தக் கட்டிடத்தில் மொத்தம் எத்தனைப் பேர் தன் வயதில் வேலை பார்க்கிறார்களென எண்ணிக் கொண்டவள் கடைசியாக 13சிறுவர்களும் 8 சிறுமிகளும் இருப்பதாக முடிவுக்கு வந்தாள் [10]. இவ்வளவு பேர் இருந்தும் ஒரு நாள் கூட இவர்களுடன் சேர்ந்து விளையாட முடியவில்லையே என அவளுக்கு ஏக்கமாக இருந்தது. ஆதம்மா எல்லா வேலையையும் கற்றுக் கொண்டு தன் அம்மாவிற்கு உறுதுணையாக இருந்தாள். ஆதம்மா போன்ற குழந்தைத் தொழிலாளி உருவாவதற்குக் காரணமாக இச்சமுதாயமும், அதில் வாழும் மானிடர்களுமே என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

பெண்ணியம் என்பது சமூக , கலாச்சார அரசியல் இயக்கங்கள் , செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும். இந்நவீன யுகத்தில் குடும்பச் சூழல் காரணமாகவும் , வறுமையினாலும் தவறான தொழிலை

செய்ய முற்படுகின்றனர். இவர்களுக்கு மாறாக குடும்ப சூழலில் வாழும் பெண்கள் தன்னால் முடிந்த வேலைகளைச் செய்து தன் குடும்ப வாழ்வாதரத்தை மேம்படுத்துவதையும் , தன் குடும்ப வாழ்விலிருந்து ஒரு பெண் புறக்கணிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டால் ஏற்படும் விபரீத்தையும் , இக்காலப் பெண்களில் ஆர்த்தி மாதிரியான மனித நேயமும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையும் உள்ள பெண்களைக் காண்பதும், ஒரு ஆண் பொறுப்பாக இல்லையென்றால் அந்த குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சிதைவுறுவதையும், பள்ளிக்கு செல்லும் வயதில் வேலைக்கு சென்று தன் அம்மாவிற்கு உதவும் ஆதம்மா போன்ற குழந்தைத் தொழிலாளர்களின் அவலநிலையும் "உப்பு நாய்கள் " என்ற நாவல் மூலம் எடுத்துரைக்கின்றார் எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார்.

**அடிக்குறிப்புகள்**

1. பெண்ணியம் முனைவர் இ.சா. பிரேமா ப.14
2. பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்,
   முனைவர் இரா.ரெங்கம்மாள்
   முனைவர் சி.வாசுகி ப.9
3. மேலது ப.9
4. உப்பு நாய்கள் – லஷ்மி சரவணகுமார் ப.169
5. மேலது ப.142-143
6. மேலது ப.158
7. மேலது ப.192
8. மேலது ப.239
9. மேலது ப.249
10. மேலது ப.139

**துணை நின்ற நூல்கள்**

1. பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் Dr.முத்துச்சிதம்பரம்
   முதற்பதிப்பு டிசம்பர் 1995 தமிழ்ப் புத்தகாலயம்
2. பெண்ணியம் முனைவர் இரா.பிரேமா ஏப்ரல் 2000
   தமிழ்ப் புத்தகாலயம்
3. பெண்ணியம் அணுகுமுறைகளும், இலக்கிப் பயன்பாடும் –
   முனைவர் இரா. ரெங்கம்மாள்
   முனைவர் சி. வாசுகி
   முதற்பதிப்பு - பிப்ரவரி, 2005 அறிவு பதிப்பகம்
4. உப்பு நாய்கள் – லஷ்மி சரவணகுமார் – ஜீலை 2015
   டிஸ்கவரி புக் பேலஸ் (பி) லிட்.